

# கிறிஸ்துவுடன் ஜீவித்தல்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** கொலோ 3:1–17; ரோமர் 1:18; 6:1–7; எபே 4:22–24; உபா 7:6–8; 1சாமு 16:23.

**மனன வசனம்:** இவை எல்லாவற்றின்மேலும், பூரணசற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்ளுங்கள். கொலோசெயர் 3:14.

அளவுக்கு அதிகமாக பரலோகச் சிந்தையுடன் இருந்தால், இந்தப் பூமியில் நம்மால் பயனிராது என்று பொதுவாகச் சொல்லப்படுகிறது. சில வகையில் இது உண்மையாக இருக்கலாம், ஆனால் இதற்கு இணையான ஒரு முக்கியக் கருத்தை கொலோ 3இல் பவுல் முன்வைக்கிறார்: அதாவது, நாம் அளவுக்கு அதிகமாக பூலோகச் சிந்தையுடன் இருந்தால், ஆண்டவருக்கு தேவையான எந்தப் பரலோக நன்மையும் நம்மிடம் காணப்படாது. பரலோகத்திலிருந்து பிறந்த, 'கிறிஸ்துவுடன்கூட எழுந்தவர்கள்' மட்டுமே புரிந்துகொள்ளக்கூடிய நடைமுறைரீதியான, நிஜவாழ்வுக்கான பல நியதிகளை பவுல் முன்வைக்கிறார். கொலோ 3:1.

பூலோக வாழ்வுக்கு நடைமுறைரீதியான, நிஜமான நியதிகளை ஆலோசனையாக வழங்குகிறார்; அவை சபைக்குள் மட்டுமல்ல, எல்லா இடங்களிலும் நம் உறவுகளை மேம்படுத்தக்கூடியவை. 'உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்கு புத்திரராயிருப்பீர்கள்; அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்' என்று இயேசு சொன்னார். மத் 5:44,45.

சாத்தியமற்றதுபோலத் தெரிகிறதா? நாம் மரித்தால்தான் தேவனுக்காக உண்மையிலேயே வாழமுடியும். அதனால்தான், நாம் ஏதாவது வகையில் இந்தப் பூமியில் நம் பரலோகப் பிதாவுக்கு பயனுள்ளவர்களாக இருப்பதற்கு பரலோகச் சிந்தையுடையவர்களாக இருக்கவேண்டும். கிறிஸ்துவுடன் வாழ்வதால் இம்மையிலும் மறுமையிலும் வித்தியாசம் ஏற்படுவதுபற்றி இந்த வாரம் பார்ப்போம்.

*2026, மார்ச் 14 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# பரலோகச் சிந்தை

**நாம் பரலோகச் சிந்தையுடன் இருப்பதற்கு எது தேவையென்று பவுல் சுட்டிக் காட்டுகிறார்? கொலோ 3:1-4. அதன் அர்த்தம் என்ன?**

மலை உச்சியில் நின்றால், சுற்றிலுமுள்ள நிலப்பரப்புகளைப் பார்க்கமுடியும். தேவனோடு நெருக்கமான உறவை விரும்புகிறவர்கள் மலைகளுக்குச் செல்வது தொன்றுதொட்ட ஒரு பழக்கம். சங் 121:1,2. மனிதர்களே உருவாக்கின ஜிகுராட் கோபுரங்கள்கூட, தேவர்களைச் சந்திப்பதற்கு அஞ்ஞானிகள் உருவாக்கின உயரமான மேடுகள்தாம். ஊர் எனும் பட்டணத்திலிருந்து வெளியே வரும்படி ஆபிரகாம் அழைக்கப்பட்டார் அல்லவா? அங்கு பல மைல் தூரத்திலிருந்தும் பார்க்கக்கூடிய ஒரு ஜிகுராட் கோபுரம் இருந்தது. ஆனால் மேட்டுப் பகுதிகளை உருவாக்குவதுமட்டுமே ஆவிக்குரியரீதியாக எவரையும் பரலோகத்திற்கு அருகே கொண்டுவந்து விடாது. மனித முயற்சியால் அது சாத்தியமே இல்லை.

மாறாக, ஞானஸ்நானம் அடையாளமாகச் சுட்டிக்காட்டுகிறபடி, நாம் கிறிஸ்துவுக்குள் மரித்து, அவரோடு உயிர்த்தெழுந்திருந்தால், கிருபை அற்புதமாக நம்மை பரலோகத்தோடு நெருங்கச் செய்கிறது.

கொலோசெயர் 3இன் துவக்கமுதல் பரலோகம்தான் வலியுறுத்தப்படுகிறது: ‘மேலானவைகள்,’ ‘கிறிஸ்து வீற்றிருக்கும் இடத்திலுள்ள,’ ‘மேலானவைகள்,’ ‘கிறிஸ்துவுடனே தேவனுக்குள்,’ ‘அவரோடேகூட மகிமையிலே.’ கொலோ 3:1-4.

கிறிஸ்தவ வாழ்க்கையில் விளக்கமளிக்க முடியாத பல விஷயங்கள் உள்ளன. ஒரு நபர் இருக்கிறபடியே இருக்கும்போது, எவ்வாறு உண்மையில் ‘மரிக்க’ முடியும், ‘எழுந்திருக்க’ முடியும்? பரிசுத்த ஆவியானவரின் செல்வாக்கின்றி, சுபாவ மனதால் இதற்கு விளக்கமளிக்க முடியாது. ஆனால் ஆவிக்குரிய சிந்தையுள்ளவர்கள், தேவன் வாக்களித்த புதிய இருதயத்தைப் பெற்றிருப்பதால், பாவத்திற்கு மரிப்பதும், கிறிஸ்துவுடன் எழுந்திருப்பதும் மெய்யான எதார்த்தங்களெனப் புரிந்திருப்பார்கள். அதைத்தான், ‘அவர் ஜீவிப்பதை எவ்வாறு அறிவாய் என்று கேட்டாய்? அவர் என் இருதயத்தில் வாழ்வதால் அறிவேன்’ என்கிற பாடல் சொல்கிறது.

இந்த ஆவிக்குரிய வாழ்வு தொடர்ந்து புதுப்பிக்கப்படவேண்டும் என்பதால், பவுல் இந்தக் கட்டளைகளைக் கொடுக்கிறார். 2கொரி 4:16. நாம் விழுந்து, இரட்சிப்பை இழந்துபோகவும் வாய்ப்புள்ளது! இந்த வாழ்க்கையின் பாவச் சோதனைகளிலிருந்து நாம் ஒருபோதும் பாதுகாப்பாக இருக்கமுடியாது.

எனவே தினமும் நாம், ‘மேலானவைகளையே தேடுவதற்கு’ தீர்மானிக்க வேண்டும். கொலோ 3:1. நம்முடைய நித்திய வாழ்வு ‘கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது.’ கொலோ 3:3. ஆனால் அந்த வாழ்க்கையின் விளைவுகள் மறைந்திருக்க வாய்ப்பே இல்லை.

---

**உங்களுடைய எண்ணங்கள் எங்கே இருக்கின்றன, மேலேயா, கீழேயா? கீழே என்றால், அவற்றின் திசையை எவ்வாறு மாற்றலாம்?**

# பூலோகச் சிந்தையை அழித்துப்போடுங்கள்

'போர்களை ஒழிப்போம்!' 'காடழிப்பை ஒழிப்போம்' 'அணு ஆயுதங்களை ஒழிப்போம்' போன்ற கோஷங்களுக்குப் பஞ்சமில்லை. ஆனால், 'பூலோகச் சிந்தையை அழிப்போம்' என்று யாரும் போராடிக் கேட்டிருக்க மாட்டோம். உலகத்தார் அப்படி யோசிப்பதே இல்லை. முந்தின கோஷங்கள் தவறென்றோ அவற்றின் நோக்கம் தவறென்றோ சொல்லமுடியாது. ஆனால் நித்தியவாழ்வு நெருங்கியிருக்கிற நிலையில், அவை குறுகிய பார்வையுடைய கோஷங்களே. நமது கவனம் நித்தியத்தை நோக்கியதாக இருக்கவேண்டும்.

**சுயத்திற்கும், பூலோக சிந்தைக்கும் மரிப்பதையும், 'மேலானவை(களுக்கு)' பிழைத்திருப்பதையும் நாம் எவ்வாறு அனுபவிக்கலாம்? கொலோ 3:1,5,6; ரோமர் 6:1-7.**

ஆவிக்குரியரீதியில் நாம் கிறிஸ்துவுடன் மரித்திருக்கலாம், ஆனாலும், நம் 'அவயவங்களை', அதாவது, நம் சரீர-மனப் பாவத்தூண்டல்களை, நாம் மரிக்கக் கொடுக்கவேண்டும்.

இந்தக் கட்டளையுடன் தொடர்புடைய இரண்டு விஷயங்கள் உள்ளன.

ஒன்று, கொலோ 3:1இல், பவுல் பயன்படுத்துகிற கிரேக்க நடை உணர்த்துகிற உண்மை; அதாவது, கிறிஸ்துவுடன் நாமும் உயிர்த்தெழுந்துவிட்டோம். இரண்டு, அந்த உண்மையால் உண்டாகிற விளைவு; அதைத்தான் 'ஆகையால்' என்று கொலோ 3:5இல் உள்ள கட்டளை காட்டுகிறது. நாம் கிறிஸ்துவுடன் எழுந்திருப்பதால் விபசாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, பொருளாசை போன்ற பூலோக சிந்தனைகளை மரிக்கக் கொடுக்கலாம்; ஏனென்றால், கிறிஸ்துவின் ஆவிக்குரிய ஜீவனும் வல்லமையும் நம் சிந்தைகளிலும் வாழ்க்கையிலுமிருந்து இவற்றையெல்லாம் வெளியேற்றி விடுகின்றன.

'தேவகோபாக்கினை' என்கிற சொற்றொடர், கிரேக்க மொழியில் கொலோ 3:6இலும், ரோமர் 1:18இலும் மட்டுமே வருகிறது. மனிதர்களை தேவன் அவர்களுடைய துன்மார்க்க வழிகளுக்கு ஒப்புக்கொடுக்கிறார்; எனவே கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் அவருடைய கோபம் வருகிறது. கொலோ 3:6; வெளி 6:16,17. பவுல் 'அவபக்தியையும் அநியாயத்தையும்' 'அசுத்தம்' என்கிறார். அப்படிப்பட்டவர்கள் 'தங்கள் இருதயத்திலுள்ள இச்சைகளினாலே தங்கள் சரீரங்களை அவமானப்படுத்துகிறவர்கள்'. ரோமர் 1:18,24. இங்கு கொலோ 3:5இல் வருகிற அதே கிரேக்க வார்த்தையைப் பயன்படுத்துகிறார்.

அவர்கள் எவ்வாறு தங்கள் சரீரங்களை அவமானப்படுத்துகிறார்கள்? முதலாவது, தங்கள் சிருஷ்டிகரை அங்கீகரிக்கவில்லை; மேலும், 'இழிவான இச்சைரோகங்களுக்கு' ஆளானார்கள். 'அந்தப்படியே அவர்களுடைய பெண்கள் சுபாவ அநுபோகத்தைச் சுபாவத்துக்கு விரோதமான அநுபோகமாக மாற்றினார்கள். அப்படியே ஆண்களும் பெண்களைச் சுபாவப்படி அநுபவியாமல், ஒருவர்மேலொருவர் விரகதாபத்தினாலே பொங்கி, ஆணோடே ஆண் அவலட்சணமானதை நடப்பித்து, தங்கள் தப்பிதத்திற்குத் தகுதியான பலனைத் தங்களுக்குள் அடைந்தார்கள்.' ரோமர் 1:26,27.

---

**'ஆகவே பூமிக்குரிய இயல்புக்குச் சொந்தமானவைகளை சாகடித்துவிடுங்கள்' எனும் வார்த்தைகளின்படி எவ்வாறு நடக்கலாம்? கொலோ 3:5. சமகால மொழிபெயர்ப்பு.**

# அறிவில் புதிதாக்கப்பட்டீர்கள்

**பவுல் தான் பேசிவருகிற கருத்துபற்றி தொடர்ந்து கூறுவது என்ன? கொலோ 3:6-11.**

---

மரணத்திலிருந்து ஜீவன் என்கிற ஒரு தீர்க்கமான மாற்றம் உண்டாவதை 'இப்பொழுதோ' என்கிற வார்த்தை சுட்டிக்காட்டுகிறது. கொலோ 3:8. இதற்கான கிரேக்க வார்த்தை ஒரு கருத்தை வலியுறுத்துகிறது. இப்பொழுது, கிறிஸ்துவுடன் எழுந்து, மேலானவைகளைத் தேடுவதால், முந்தின வாழ்க்கையைவிட தற்போதைய வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க ஒரு மாற்றம் காணப்படுகிறது. 'பூமிக்குரிய இயல்புக்குச் சொந்தமானவைகளை' சாகடிப்பதால் (கொலோ 3:5, சமகால மொழிபெயர்ப்பு), 'கோபமும் மூர்க்கமும் பொறாமையும், உங்கள் வாயில் பிறக்கலாகாத தூஷணமும் வம்பு வார்த்தைகளுமாகிய இவைகளையெல்லாம்' விட்டுவிடவேண்டும். கொலோ 3:8.

பாவத்தைக் கண்டு தேவனில் உண்டாகிற நீதியான எதிர்வினை கோபமும் உக்கிரமும். (நேற்றைய பாடத்தில் பார்த்தோம்). இயேசுவிலும் அவை வெளிப்பட்டுள்ளன. மாற்கு 3:5; வெளி 6:16. மாறாக, 'யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக்கடவர்கள்; மனுஷருடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்கமாட்டாதே' என்று யாக் 1:19,20 சொல்கிறது.. பொறாமை மற்றவர்களுக்கு கேடு நேரிட விரும்புகிறது. தூஷணமான வம்பு வார்த்தைகளை பிறரின் நற்பெயரைக் கெடுப்பதற்காகப் பேசுகிறார்கள். இறுதியாக, ஒருவருக்கு ஒருவர் பொய்ப் பேசக்கூடாது. ஏனென்றால், பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்துபோட்டிருக்கிறோம். கொலோ 3:9; லேவி 19:11,18.

**'புதிய மனுஷன்' 'பழைய மனுஷன்' என்று பவுல் வேறுபடுத்திக் காட்டுவதின் அர்த்தம் என்ன? ரோமர் 6:6; எபே 4:22-24.**

---

ஒருவர் பழைய உடைகளைக் களைந்து, புதிய வெண்மையான வஸ்திரங்களைத் தரிப்பதுண்டு. பழைய மனுஷனிலிருந்து புதிய மனுஷனாக மாறுவதை உடுத்துகிற செயலுடன் பவுல் ஒப்பிட்டுக் காட்டுகிறார். சக 3:4. இதேபோல, பழைய/புதிய என்கிற வேறுபாடு, பழைய, புதிய உடன்படிக்கைகள் சம்பந்தமாகவும் வருகிறது. அதாவது, பழைய உடன்படிக்கை வெளியே எழுதப்பட்ட நியாயப்பிரமாணம் சம்பந்தப்பட்டது; புதிய உடன்படிக்கை ஆவியானவர் இருதயத்திற்குள் எழுதுகிற நியாயப்பிரமாணம் சம்பந்தப்பட்டது. 2கொரி 3:4-18.

இந்த உருவகங்கள் மனமாற்றத்தையும் அதனுடைய விளைவுகளையும் விவரிக்கின்றன; பவுல் அந்த விளைவுகளை 'புதுச்சிருஷ்டி' என்கிறார். 2கொரி 5:17. நாம் கிறிஸ்துவின் சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்கிறோம். கலா 3:10. அந்தக் கிறிஸ்து 'அதரிசனமான தேவனுடைய தற்சூபம்.' 2கொரி 3:18. இதனால், நாம் மேலான ஒரு ராஜ்யத்தின் குடிமக்களாக மாறுவதால், இனம், இடம், சமுதாயப் பாகுபாடுகளைக் கடந்த ஒரு நிலைக்குச் செல்கிறோம். கொலோ 3:11.

# புதுவாழ்வின் தன்மை

நாம் கிறிஸ்துவுக்குள் வரும்போது, நம்மைவிட்டு அகன்றுபோகிற மோசமான பழக்கங்களையும் எதிர்மறையான தன்மைகளையும் விவரித்தபிறகு, நல்ல தன்மைகள்பற்றி பவுல் பேசுகிறார். அதை இருளிலிருந்து வெளிச்சத்திற்குச் செல்வதெனச் சுட்டிக்காட்டுகிறார்.

**கொலோ 3:12-14இல் விசுவாசிகளை எவ்வாறு விவரிக்கிறார்? அவர்கள் 'தரிக்க வேண்டிய' தன்மைகளுக்கும் அதற்கும் உள்ள தொடர்பு என்ன?**

இஸ்ரவேலரை தேவன் தம் விசேஷித்த மக்களாக, தம் குணத்தைப் பிரதிபலிக்க அழைத்தார், அதுபோல இயேசுவை விசுவாசிப்பவர்கள் 'தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களாக' 'தேவன் தேர்ந்தெடுத்தவர்களாக' இருக்கிறார்கள். கொலோ 3:12, எளிய மொழிபெயர்ப்பு. ஆனால் எல்லாருமே இந்த அழைப்பின்படி வாழ்வதில்லை. 'அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சிலர்' என்று இயேசு சொன்னார். மத் 22:14; 24:22,24, 31. மேலும் இஸ்ரவேலரைப்போல விசுவாசிகளும் தேவனால் 'அன்புகூரப்பட்டவர்கள்', 'பரிசுத்த ஜனம்.' உபா 7:6-8. இந்தச் சிலாக்கியத்தில் ஒரு முக்கியப் பொறுப்பும் அடங்கியிருக்கிறது; அது 'அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை' அறிவிப்பதாகும். 1பேதுரு 2:9. இங்கு நாம் வாழ்கிற விதத்தில் அதை நிறைவேற்றுகிறோம்.

எட்டுத் தன்மைகளை பவுல் பட்டியலிடுகிறார்! 'உருக்கமான இரக்கம், தயவு, மனத்தாழ்மை, சாந்தம், நீடிய பொறுமை, ஒருவரையொருவர் தாங்குதல், ஒருவருக்கொருவர் மன்னித்தல்,' 'இவை எல்லாவற்றின்மேலும், பூரணசற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்ளுதல்.' கொலோ 3:12-14. கிறிஸ்துவுடன் இணைந்திருக்கிற இருதயத்திலிருந்துதான் இவை புறப்படமுடியும், ஏனென்றால் இவை அவருடைய குணத்தின், அதாவது, நம்மை அவர் நடத்துகிற விதத்தின் பிரதிபலிப்புகள். 'கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல' நீங்கள் மற்றவர்களை மன்னிக்கவேண்டும். கொலோ 3:13. அன்பு என்பது 'பூரண சற்குணத்தின் கட்டு.' கொலோ 3:14. ஏனென்றால் அவர் நம்மீது காட்டிய அன்புதான் நம்மை அவருடன் கட்டுகிறது, நாம் மெய்யாகவே மற்றவர்களை நேசிப்பதற்கு நமக்குத் திறனளிக்கிறது. 1யோவான் 4:11,12.

இந்தத் தன்மைகள் நம் உறவுகளில் இரண்டு விதங்களில் தாக்கத்தை உண்டாக்குகின்றன. முதலாவது, மற்றவர்கள்மீது அன்பும், இரக்கமும், தயவும், மன்னிப்பும் காட்டும்போது நமக்கும் மற்றவர்களுக்கும் அது ஆசீர்வாதமாக அமைகிறது. அதனால் மற்றவர்களும் நம்மீது இரக்கம் காட்டுவார்கள். நாம் தொடர்ந்து தேவ இரக்கத்தையும் பாவமன்னிப்பையும் பெறலாம். மத் 5:7; 6:14. இரண்டாவது, அதனால் தேவனை மகிமைப்படுத்துகிறோம், இதில் தேவ கிருபையின் வல்லமை வெளிப்படுவதால், மற்றவர்களும் இயேசுவை விசுவாசிக்கவும், அவரைப் பின்பற்றவும் ஊக்குவிக்கப்படுகிறார்கள். 'சுயநலமற்ற வாழ்க்கைக்கு உள்ள ஆற்றல் மிகப்பெரியது. மனித ஆத்துமாவைச் சுற்றியுள்ள வேறு எந்த செல்வாக்கிற்கும் இதன் ஆற்றல் கிடையாது. சுவிசேஷத்திற்கு ஆதரவான மிகவல்லமையான வாதம், அன்புகூருகிற, அன்புகூரப்படுகிற கிறிஸ்தவனே.'

**நீங்கள் மற்றவர்களை, குறிப்பாக உங்களிடம் இரக்கம்காட்டாதவர்களை நடத்துகிற விதத்தில் இயேசுவை எவ்வளவு தூரம் பிரதிபலிக்கிறீர்கள்?**

# புதுவாழ்வை வாழ்தல்

சபையில் சமாதானமும் இணக்கமும் காணப்பட பவுல் விரும்பினார்; கொலோ 3இன் கடைசி வசனங்களில் அதைப் பார்க்கலாம். தேவ சமாதானம் பற்றிப் பார்த்தோம். (பாடம் 7). இது ரோமச் சமாதான யுகத்தையல்ல, கிறிஸ்துவின் சமாதானத்தைக் குறிக்கிறது; இது நமக்கு வெளியேயிருந்து கொடுக்கப்படுவதல்ல, நமக்கு உள்ளாக இருந்து 'ஆட்சிசெய்வது.' கிறிஸ்து கட்டுப்பாடு செலுத்தினால்மட்டுமே இது சாத்தியம்.

**கிறிஸ்து கட்டுப்பாடு செலுத்த உதவுவது என்ன? இவற்றிலெல்லாம் இசை என்ன பங்காற்றுகிறது? கொலோ 3:16,17.**

மிகத்தெளிவாகப் புரிந்துகொள்கிற வகையில் சொல்லப்படுகிறது. அதாவது, கிறிஸ்துவின் வார்த்தை நமக்குள்ளாகக் குடியிருக்கத் துவங்குகிறது. தேவ ஞானத்தைக் கேட்டு, கற்றுக்கொள்ள வேதாகமத்தை கவனத்தோடு வாசிக்கும்போது அது நிகழ்கிறது. கிரேக்க மொழியில் தெளிவாக இல்லை, ஆனால், 'ஒருவருக்கொருவர் போதித்து புத்திசொல்வதில்' இசை ஒரு முக்கியப் பங்காற்றுகிறது. கொலோ 3:16.

எல்லா இசையும் என்று சொல்லமுடியாது. அது எப்படிப்பட்ட இசையென இங்கும் எபே 5:19இலும் பவுல் சொல்கிறார்: 'சங்கீதங்கள், கீர்த்தனைகள், ஞானப்பாட்டுகள்.'

சங்கீதங்கள் ஏற்கனவே இருந்த பழைய ஏற்பாட்டு சங்கீதங்களின் தொகுப்பாகவும், கீர்த்தனைகள் தொகுக்கப்பட்டு வந்த புதிய ஏற்பாட்டு பாடல்களாகவும் இருந்திருக்கலாம். 'ஞானப்பாட்டுகள்' என்பது, ஆவிக்குரிய வாழ்வு அல்லது திருச்சபை வாழ்வு சம்பந்தப்பட்ட துதிப்பாடலைச் சுட்டிக்காட்டுகிற பொதுவான வார்த்தை. பாடல்களின் வார்த்தைகள் சத்தியத்தைப் போதிக்கவும், கிறிஸ்தவ புதுவாழ்வுக்கான அறிவுரையை வழங்கவும் உதவுகின்றன. கடந்த கால அற்புதமான பாடல்கள் பலவற்றில், மோசமான இந்தப் பாவ உலகில் நமக்கு அதிகம் தேவைப்படுகிற நம்பிக்கையையும் நிச்சயத்தையும் கொடுக்கிற மிக வல்லமையான செய்திகள் அடங்கியுள்ளன.

இசை ஆற்றல்மிகுந்தது. தாவீதின் சுரமண்டல இசையானது சவுலின் ஆத்துமாவைச் சமாதானப்படுத்த உதவியது. 1சாமு 16:23. ஆனால் தாவீதை சவுல் விரோதித்தபிறகு, அவரது கோபமும் மனக்கசப்பும் அதிகரித்தது. 1சாமு 18:10, 11. இனிய பாரம்பரிய இசையானது பதற்றத்தைக் குறைத்து, மூளை செயல்பாட்டைச் சீராக்கி, ஆசுவாசத்தை அதிகரித்து, வலியைப் போக்கி, சகஜமாகப் பழக உதவுவதாகத் தெரியவந்துள்ளது. இசையானது நன்மைக்கோ தீமைக்கோ நம் உணர்வுகளிலும் சிந்தனைகளிலும் வல்லமையான தாக்கத்தை ஏற்படுத்துவதை அனுபவிக்காதவர் யாராவது இருக்கமுடியுமா? சரியான இசையால் நம் ஆவிக்குரிய வாழ்வு முன்னேறும்.

---

**எதைச்செய்தாலும் 'அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே' செய்யும்படி கொலோ 3:17 சொல்கிறது. அவ்வாறு நீங்கள் செய்கிறீர்களா? இல்லையென்றால், நீங்கள் எவ்வாறு மாறலாம்? அதாவது, கர்த்தருடைய நாமத்தினாலே செய்யக்கூடாதவற்றைச் செய்யாமலிருக்க என்ன செய்யலாம்?**

# மேலும் படிக்க:

'தேவ ஆவியானவர் மனதையும் இருதயத்தையும் கட்டுப்படுத்தும்போது, மனமாற்றமடைந்த ஆத்துமா புதிய பாடலைப் பாடுகிறது; தன் அனுபவத்தில் தேவ வாக்குறுதி நிறைவேறி இருப்பதையும், தன் அக்கிரமம் மன்னிக்கப்பட்டதையும், தன் பாவம் மூடப்பட்டதையும் அந்த ஆத்துமா உணர்வதே அதற்குக் காரணம். தேவனுடைய தெய்வீகப் பிரமாணத்தை மீறுவதிலிருந்து அவர் மனமாறினார். மனிதனை நீதிமானாக்குவதற்காக மரித்த கிறிஸ்துவில் விசுவாசம் வைத்தார். விசுவாசத்தினாலே நீதிமானாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய் சமாதானம் பெற்றார். ரோமர் 5:1.'

'இத்தகைய அனுபவத்தைப்பெற்றிருக்கிறகிறிஸ்தவர், தன் கைகளைமடக்கிக்கொண்டு இராமல், தனக்காக நிறைவேற்றப்பட்டிருப்பதில் திருப்தியடையவேண்டும். ஆவிக்குரிய ராஜ்யத்திற்குள் செல்லத் தீர்மானமாக இருப்பவர், அந்தகார ராஜ்யத்தின் வல்லமைகள் ஊக்குவிக்கிற, புதுப்பிக்கப்படாத இயல்பின் ஆற்றல்களும் வெறி உணர்ச்சிகளும் தனக்கு எதிராக அணிவகுத்து நிற்பதைக் காண்பார். தினமும் தீமையுடன் போராடுவதற்கு, தினமும் தன் அர்ப்பணிப்பை அவர் புதுப்பிக்கவேண்டும். பழைய பழக்கவழக்கங்களும், தவறான பரம்பரை இயல்புகளும் ஆதிக்கம்செலுத்த முயலும்; இவற்றிற்கு எதிராக வெற்றிபெற, கிறிஸ்துவின் பெலத்தால் போராடி, எப்போதும் தன்னைப் பாதுகாக்கவேண்டும்... மேன்மையான, தூய்மையான, உன்னதமான வாழ்க்கைக்கான ஆற்றல் நமக்கு மிகவும் தேவைப்படுகிறது. நம் சிந்தையில் உலகம் அதிக இடத்தையும், பரலோக ராஜ்யம் மிகக்குறைவான இடத்தையும் பிடிக்கிறது.

'தன்னைக்குறித்த தேவநோக்கத்தை அடைவதற்கு எடுக்கிற முயற்சிகளில், கிறிஸ்தவன் எதைக்குறித்தும் நம்பிக்கையிழக்கக்கூடாது. கிறிஸ்துவின் கிருபைமூலமாகவும், வல்லமைமூலமாகவும் ஆவிக்குரிய பூரண நிலை அனைவருக்கும் வாக்களிக்கப்பட்டுள்ளது. இயேசுவே வல்லமையின் ஆதாரம், வாழ்க்கையின் ஜீவ ஊற்று. பரலோகத்தின் சர்வவல்ல ஏதுகரங்கள் அனைத்தையும் நமக்காக அவர் செயல்பட வைக்கின்றன. ஜீவனுள்ள அவரது வல்லமையை ஒவ்வோர் அடியிலும் நாம் ருசிபார்க்கிறோம்.'

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *'விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்படுகிறீர்கள்' என்பதில் உங்களுடைய அனுபவம் என்ன? இந்த அற்புதமான வாக்குறுதி உங்களுடைய வாழ்க்கையை எவ்வாறு மாற்றியது? நீங்களும் 'கிறிஸ்துவுடன்கூட எழுந்திருக்கிறீர்கள்' என்கிற வாக்குறுதி எவ்வாறு அந்தக் கருத்துடன் சம்பந்தப்படுகிறது?*
2. *பரலோகச் சிந்தையுடன் இருப்பது என்றால் என்ன? பூமியில் நன்மைகள் செய்வதைவிட அது அதிக முக்கியமானதா? இதில் எவ்வாறு சமநிலையைப் பேணலாம்?*
3. *உங்களுடைய வாழ்க்கை மற்றவர்கள்மீது எப்படிப்பட்ட தாக்கத்தை உண்டாக்குகிறது? இதை பொதுவாக நம் தனிப்பட்ட செல்வாக்கின் அடிப்படையில் யோசிக்கிறோம். ஆனால் ஒரு சபையாக எவ்வாறு செல்வாக்கு செலுத்துகிறோம்? உங்களுடைய உள்ளூர்ச் சபை உங்களுடைய சமுதாயத்தில் எப்படிப்பட்ட தாக்கத்தை உண்டாக்குகிறது?*
4. *கிறிஸ்துவுக்குள் நம்மில் காணப்படவேண்டிய ஒற்றுமைபற்றி கொலோ 3:11 என்ன சொல்லுகிறது?*

# இறுதி கெடு

அலுவலகத்திற்குச் செல்லாமல் ஆலயத்திற்குச் சென்ற அந்த ஓய்வுநாளன்று, ரெனே சூரியன் மறைந்தபிறகு தான் தங்கியிருந்த, தன் அலுவலகம் இருந்த கட்டிடத்திற்குத் திரும்பினார். உடன் வேலைசெய்பவர் முதலாளி கொடுத்த கடிதத்தை ரெனேவிடம் கொடுத்தார். அதில் அவர் வேலையை விட்டு நீக்கப்பட்டதாக எழுதப்பட்டிருந்தது.

ரெனேவுக்கு அதிர்ச்சியாக இருந்தது. அடுத்து என்ன நடக்கப்போகிறதென அவருக்குத் தெரியவில்லை. கிறிஸ்தவமார்க்கத்திற்கு எதிரான ஒரு நாட்டில் வேலைசெய்கிற ஒரு அந்நிய நாட்டவராக இருந்ததால், சிறைத்தண்டனையோ மரணத்தண்டனையோ விதிக்கப்பட்டால், தன்னால் உண்மையாக இருக்கமுடியுமா என்று யோசித்தார். 'ஆண்டவரே, இது நான் பிலிப்பைன்ஸுக்குத் திரும்பவேண்டிய நேரமா? இங்கேயே நான் மரிப்பது உம்முடைய சித்தமானால், எனக்குப் பிரச்சினையில்லை. நான் என் விசுவாசத்திற்காகப் போராடுவது அநேகருக்குத் தெரியும்' என்று ஜெபித்தார்.

அடுத்த நாள் அதிகாலையிலேயே அலுவலகத்திற்குச் சென்று, முதலாளிக்கு ஒரு மின்னஞ்சல் அனுப்பினார். 'நான் உங்களை மதிக்கிறேன். நீங்கள் என் நண்பர், என் மூத்த சகோதரர். நீங்கள் அலுவலகத்திற்கு வந்தபோது உங்களுக்கு ஏற்படுத்தின சிரமம்பற்றி உங்களுடன் பேச விரும்புகிறேன்' என்று எழுதினார்.

அன்று இரவு, அவருடைய முதலாளி அலுவலகத்திற்கு வந்தார். அவர் விரக்தியில் இருந்ததுபோலத் தெரிந்தது. 'ஆண்டவரே, என் முதலாளியின் கோபம் தணியவைண்டும். நான் மரிப்பது உம்முடைய சித்தமானால், அதை ஏற்றுக்கொள்கிறேன்' என்று ஜெபித்தார்.

பிறகு முதலாளி ரெனேவை அழைத்தார். ரெனே எழுந்திருக்க முயன்றார், முடியவில்லை. முழங்கால்களில் பெலனே இல்லை. தான் மரித்துக் கொண்டிருப்பதுபோல உணர்ந்தார். பெலனை எல்லாம் திரட்டிக்கொண்டு, நாற்காலியிலிருந்து எழுந்து, தட்டுத்தடுமாறி முதலாளியின் அறைக்கு நடந்துசென்றார். கதவைத் தட்டுவதற்காக கையைத் தூக்கியபோது, 'பயப்படாதே, நானே மெய்யான தேவன். நான் என் வாக்குறுதிகளில் உண்மையுள்ளவன்' என்று ஒரு சத்தம் கேட்டது. சற்றுநேரம் கழித்து, கதவைத் திறந்து, தன் முதலாளியின் கடுகடுப்பான முகத்தைப் பார்த்தார். உள்ளே நடந்துசென்றபோது, 'நானே மெய்யான தேவன். நான் என் வாக்குறுதிகளில் உண்மையுள்ளவன்' என்று இரண்டுமுறை சத்தம் கேட்டது. ஒவ்வொரு முறையும் அந்தச் சத்தம் அதிக வலுவாகக் கேட்டது.

முதலாளி ரெனேவிடம் வேலை ஒப்பந்த ஆவணம் ஒன்றையும், ஒரு விமானப் பயணச்சீட்டையும் கொடுத்து, ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுக்கச் சொன்னார். நிம்மதியடைந்து, ரெனே அமைதியாக ஜெபித்தார். 'ஆண்டவரே, நான் சிறைச்சாலைக்குச் செல்லப் போவதில்லை, உமக்கு நன்றி' என்று ஜெபித்தார். விமான பயணச்சீட்டைத் தேர்ந்தெடுத்தார்.

ஆனால் முதலாளி, சனிக்கிழமைகளில் வேலைசெய்தால், இரண்டு மடங்கு சம்பளம் வழங்கப்படுமென ஒப்பந்தத்தில் எழுதியிருந்தார். ஆனாலும் பயணச்சீட்டைத்தான் தேர்ந்தெடுத்தார். அதற்கான பணத்தை எப்படிச் செலுத்துவதென யோசனையாக இருந்தது. 'நானே மெய்யான தேவன். நான் என் வாக்குறுதிகளில் உண்மையுள்ளவன்' என்கிற சத்தம் மீண்டும் கேட்டது.



'புதிதாக வேலை கிடைக்கிற வரையிலும், உன்னிடமுள்ள பணம் குறைந்துபோவதில்லை' என்று அந்தச் சத்தம் பேசியது.